THIRU T. MARTIN: There are certain departments whose Heads require extensive technical knowledge. For proper functioning of such departments, viz., Electricity Board, will the Government come forward to appoint such personnel who have extensive technical experience to man the same?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதிலே டெக்னிகல் அறிவை மாத்திரம் பார்க்க முடியாது. நிர்வாகத் திறனும் முக்கியம்.

Liquor Permits

* 188 Q.—THIRU A. M. RAJA:
THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether liquor permits have been granted to any of the I.C.S., I.A.S. and I.P.S. Officers in our State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. எம். ராஜா: தலைவர் அவர்களே, பணக்காரர்கள் லைசென்ஸ் பெற்று மது அருந்துகிறார்கள். ஆனால் அதேபோல் ஏழைகள் லைசென்ஸ் பெறமுடிவதில்லை. சட்டத்தின் மூலம் மது அருந்தக்கூடாது என்று சொல்வதால் செலவும் அதிகம் ஆகிறது, அரசாங்கத்திற்கு வருமானமும் குறைகிறது. எனவே இந்த மதுவிலக்கை ரத்து செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி பர்மிட் கொடுப்பது பற்றியது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழாக் காலம் ஆனதினாலே பர்மிட்டுக்கு மனு செய்துள்ளவர்களில் யாராவது 'வித்டிரா' செய்திருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அரிய யோசனையைக் கேட்டு அவர்களே கொஞ்ச காலம் பின்வாங்கிக் கொள்வார்களானால் நலமாக இருக்கும்.

Eradication of Leprosy

* 189 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(a) whether the Union Government have consulted the State Government on the launching of a crash programme to eradicate Leprosy in Madras;

(b) if so, the details thereof; and

(c) the amount likely to be got from the Centre?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

1969 செப்டம்பர் 11]

DR. H. HANDE : May I know whether it is a fact that under the Fourth Five-Year Plan, Madras had been allotted Rs 1.5 crores for starting 30 control units and 175 Study, Education and Training Centres and 7 Leprosy Centres as recently announced by Mr. B. S. Murthy, Union Deputy Minister for Health? Is the Government in touch with the Central Government with regard to this subject? Will they take serious note and take effective steps and see that eradication programme is put into full swing?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்திய பொதுநலத் துறை அமைச்சர் 22—2—1969 அன்று நடைபெற்ற தொழுநோய் மாநாட்டிலே பேசுகின்றபோது ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதாவது—

We are thinking of launching a crash programme so that the work of identification and cure and possibly eradication could be accomplished.

தொழுநோயை அறவே ஒழிப்பதற்கு ஒரு தீவிர திட்டத்தைக் கொண்டுவருவது பற்றி எண்ணிக்கொண்டிருக்கிறோம் என்று தெரிவித்தார்கள். இந்த அளவிற்குத்தான் இந்த அரசுக்கு செய்தி கிடைத்திருக்கிறது. வேறு எதைப்பற்றியும் மத்திய அரசிடமிருந்து தகவல் வரவில்லை. இதை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்ப்பதைப்பற்றித் தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம். அதைப்பற்றிய குறிப்பு இந்த அரசுக்கு வரவில்லை.

DR. H. V. HANDE : Even if the Central Government does not give the grant, will not this Ministry take steps to see that some crash programme on behalf of the State Government is instituted immediately because this leprosy disease is very much on the increase and is already becoming a social menace? Will the Government say whether they have any schemes up their sleeves and will they see that this leprosy relief programme is expanded?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தொழுநோயை அகற்றுவதுபற்றி இந்த அரசு தீவிரமாக எண்ணிக் கொண்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று, இருக்கின்ற சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு, தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க அரசு முயலும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, அரசாங்கம் அல்லாத தனியார் நடத்திவருகின்ற லெப்ரஸி ஆஸ்பத்திரிகளுக்கு அரசாங்கம் என்னென்ன உதவிகளை அளித்துக்கொண்டிருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் தொடர்புடையதாகக் கேளுங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மத்திய அரசு மாநில அரசுக்கு எந்த அளவிலே உதவி செய்கிறது? மாநில அரசு என்னென்ன உதவிகளை தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு அளித்துக்கொண்டிருக்கிறது? அரசு கொடுக்கின்ற நிதி உதவி போதாது என்ற

குறை பல ஸ்தாபனங்களிலிருந்து தெரிவிக்கப்படுவதால், அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து, தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு ஆதரவளிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இப்பொழுது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

* 190 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether any new vaccine for leprosy treatment has been invented at the Leprosy Research Centre and Sanatorium at Kotagiri near Vellore?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கோட்டகிரியில் தொழுநோய் ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்த நலம்பேண் மருத்துவமனை இல்லை. ஆனால் வேலூரை அடுத்த காரிகிரியில் அவ்வித நிலையம் ஒன்று உள்ளது. இந்நிலையத்தில் தொழுநோய் சிகிச்சைக்கு ஊசி மூலம் போடும் மருந்து ஒன்றும் கண்டுபிடிக்கப் படவில்லை.

Tuberculosis

* 191 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether any survey has been conducted into the incidence of T. B. in the State in 1968; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : தலைவர் அவர்களே, இந்தக் கொடிய வியாதி இலட்சக்கணக்கான மக்களை அழித்துவருவதால் இந்த எலும்பு உருக்கி நோயை விஞ்ஞான ரீதியில் தடுப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எலும்பு உருக்கி நோய் குறித்து மாதிரிக் கணக்கெடுப்பு எப்பொழுது எடுக்கப்பட்டது என்று கேள்வி கேட்கப்பட்டது. 1955-ம் ஆண்டிலிருந்து 1958-ம் ஆண்டு வரையில் (இந்தியா முழுவதிலும்) அப்படிப்பட்ட மாதிரிக் கணக்கெடுப்பு எடுக்கப் பட்டது. ஆனால், தமிழகத்தில் அப்பொழுது அந்தக் கணக்கெடுப்பு எடுக்கப்படவில்லை. அகில இந்திய கணக்கெடுப்பு அடிப்படையில் பார்க்கும்போது, 1.4 சதவீதம் அளவில் இருந்தது, 1.8 சதவீதமாக இந்த எலும்புருக்கி நோய் பற்றியிருப்பதாகக் கணக்கு இருக்கிறது. மாநில அரசைப் பொறுத்தவரையில், எலும்புருக்கி நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு தக்க முறைகள் கையாளப்படுகின்றன. அதுபற்றி அரசு தீவிரமான கவனம் செலுத்தி வருகிறது.